Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 29    (13-01-1992)    திங்கட்கிழமை    ஓசை: 329

## பிறப்புவீதம் குறைவு விவாகம் அதிகரிப்பு

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டில் பிறப்பு இறப்பு விகிதம் குறைந்துள்ளது. விவாகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவ்விபரத்தை பதிவாளர்திணைக்களம் வெளியிட்டுள்ளது.

1990 இல் பிறப்பு 3,40,358 குழந்தைகள் இறப்பு 97,807 பேர். விவாகங்களின் எண்ணிக்கை 1,51,935 ஆகும். 1989 ஐ விட பிறப்பு 14,312 ஆல் குறைந்துள்ளது. இறப்பு1883ஆல்குறைந்துள்ளது. விவாகங்கள் 18ஆயிரத்தால் அதிகரித்துள்ளன.

# பேச்சுக்கு மத்தியஸ்துவம் வகிக்க கனடா அரசாங்கம் தயார்

## போர் நிறுத்தத்தை கண்காணிக்கவும் இணக்கம்

(கொழும்பு)

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமானால் அதற்கு மத்தியஸ்துவம் வகிக்க கனடா அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. சிறிலங்கா இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கும் மத்தியில் போர்நிறுத்தம் ஏற்படும்பட்சத்தில் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கவும் தனது இராணுவ நிபுணர்களை அனுப்பிவைக்க கனடா இணக்கம் தெரிவித்திருக்கிறது. நம்பகரமான இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து இத்தகவல்கள் ஈழநாதத்திற்கு கிடைத்திருக்கிறது.

போர் நிறுத்த கண்காணிப்பிற்கும், மத்தியஸ்துவத்திற்கும் கனேடிய அரசு விருப்பம் தெரிவித்திருப்பினும், சிறிலங்கா அரசு கனடாவின் இந்த ராஜதந்திர சமரச முயற்சியை அங்கீகரிக்குமா என்பது சந்தேகமானதென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இது ஒருபுறமிருக்க, இலங்கை விவகாரத்தில் வெளிநாட்டு அரசு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

யெசிந்தன்

புளியங்குளம் மன்னார் வீதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று திடீரென ஏற்பட்ட நேரடி மோதலில் யெசிந்தன் (நாவுக்கரசன், துரைராசா கௌரிசங்கர் மன்னார் வீதி, வவுனியா) என்ற போராளி வீரச்சாவடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## மூளாய், பொன்னாலைப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு; எறிகணைத் தாக்குதல்

மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகள் மீது விமானக்குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. சிறிலங்காப்படைகளினால் நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களினால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார். நேற்று அதிகாலை 12.30 மணிமுதல் 4.30 மணி வரை மேற்படி பகுதிகள் மீது ஆட்லறி ஷெல்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. பலாலி, ஊர்காவற்றுறை ஆகிய சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களினால் திருநாவுக்கரசு என்பவர் பலத்த காய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உலகில் 125 கோடி முஸ்லிம்கள்

(கொழும்பு)

உலகெங்கிலும் 125 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்று உலக முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

## பூநகரியில் இராணுவம் மீது 'அருள்-89' தாக்குதல்

பூநகரிப்பகுதியிலுள்ள மட்டுவில் நாடு பகுதியில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளால் 'அருள்-89' தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இத்தாக்குதல் நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. இதனையடுத்து சிறிலங்கா இராணுவம் பொதுமக்கள் வதிவிடங்களை நோக்கி எறிகணைத் தாக்குதலும் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொண்டது.

மட்டுவில்நாடு மேற்கில் உள்ள உ. அ, அதிபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மல்வத்தை பீடாதிபதியால் தொண்டா திட்டம் நிராகரிப்பு

(கண்டி)

இனப் பிரச்சினை தொடர்பானஅமைச்சர்எஸ். தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைத் தான் நிராகரிப்பதாக மல்வத்தைப் பீடாதிபதி வண. றம்புக்கலவெல சிறி விபாசி மகாநாயக்க தேரோதெரிவித்தார்.

இதனை ஏலவே எதிர்த்த மகாநாயக்காமீள ஆலோசித்த பின் தீர்வுத்திட்டத்தை வரவேற்றிருப்பதாகத் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்துத் தான் கவலை கொண்டுள்ளதாகவும் வண. மகாநாயக்கா தெரிவித்தார்.

அவர் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையொன்றில், ஜனவரி

## அமைச்சர் தொண்டமானை

## திருமலையில் ராணுவத்தின் அட்டூழியம் தொடர்கிறது

திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள்மீது தாக்குதல் நடைபெற்று வருகிறது. புதுக்குடியிருப்பு மேற்கு, கொலனிப்பட்டிமேடு, நாயன்மார்திடல், குஞ்சம்பத்திடல் ஆகிய தமிழ் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை சிறிலங்கா இராணுவத்தினர்கைது

(3 ஆம் பக்கம் பார்க்க)

## [illegible] குழுவினர்

# போர் நிறுத்தத்தை கண்காணிக்கவும் இணக்கம்

(கொழும்பு)

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமானால் அதற்கு மத்தியஸ்துவம் வகிக்க கனடா அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. சிறிலங்கா இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கும் மத்தியில் போர்நிறுத்தம் ஏற்படும்பட்சத்தில் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கவும் தனது இராணுவ நிபுணர்களை அனுப்பிவைக்க கனடா இணக்கம் தெரிவித்திருக்கிறது. நம்பகரமான இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து இத்தகவல்கள் ஈழநாதத்திற்கு கிடைத்திருக்கிறது.

போர் நிறுத்த கண்காணிப்பிற்கும், மத்தியஸ்துவத்திற்கும் கனேடிய அரசு விருப்பம் தெரிவித்திருப்பினும், சிறிலங்கா அரசு கனடாவின் இந்த ராஜதந்திர சமரச முயற்சியை அங்கீகரிக்குமா என்பது சந்தேகமானதென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இது ஒருபுறமிருக்க, இலங்கை விவகாரத்தில் வெளிநாட்டு அரசு

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மல்வத்தை பீடாதிபதியால் தொண்டா திட்டம் நிராகரிப்பு

(கண்டி)

இனப் பிரச்சினை தொடர்பானஅமைச்சர்எஸ். தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைத் தான் நிராகரிப்பதாக மல்வத்தைப் பீடாதிபதி வண. றம்புக்கலவெல சிறி விபாசி மகாநாயக்க தேரோதெரிவித்தார்.

இதனை ஏலவே எதிர்த்த மகாநாயக்காமீள ஆலோசித்த பின் தீர்வுத்திட்டத்தை வரவேற்றிருப்பதாகத் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்துத் தான் கவலை கொண்டுள்ளதாகவும் வண. மகாநாயக்கா தெரிவித்தார்.

அவர் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையொன்றில், ஜனவரி 2 ஆம் திகதி அமைச்சர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தொண்டமானை பதவியிலிருந்து நீக்குக

-ஐ. தே. கட்சி உறுப்பினர் கோரிக்கை

(மாத்தறை)

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும், முப்படையினருக்கும் எதிராகப் போராடிவரும் விடுதலைப் புலிப்படையினரின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்க முயலும் அமைச்சர் தொண்டமானைப் பதவியில் இருந்து ஒதுக்கிவிடுமாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவை ஹக்மனை முலட்டியன பிரதேச சபை கேட்டுள்ளது.

இதுகுறித்த தீர்மானம் ஒன்றை மேற்படி பிரதேச

(3ஆம் பக்கம் பார்க்க)

## 1991 இல் 83 பத்திரிகையாளர் கொலை

1991 ஆம் ஆண்டு உலகத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை பயங்கரவாத நட

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நிலைகளுக்கு கூடுதல் பாதுகாப்பு

வடக்குக் கிழக்கிலுள்ள ஆயுதப்படை பாதுகாப்பு நிலைகளில் ஆகக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு சிறிலங்கா கூட்டுப்படைத்தளபதி ஹமில்டன் வணசிங்கா உத்தரவிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஆரியரெட்னாவின் சகா இயக். இருந்து ராஜினாமா

சர்வோதய இயக்கத் தலைவர் ஆரியரெட்னாவின் சரிதையை எழுதியவரும் இந்த இயக்கத்தின் ஸ்தாபக அங்கத்தவருமான குணதாச லியனகே இயக்கத்திலிருந்து ராஜினாமாச் செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

ஆரியரெட்னா அரசியலில் பிரவேசிக்கத் எடுத்த முடிவை அடுத்தே அவர் இராஜினாமா

( 3 ஆம் பக்கம் பார்க்க )

மூளாய், பொன்னாலைப் பகுதியில்

## விமானக் குண்டு வீச்சு; எறிகணைத் தாக்குதல்

மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகள் மீது விமானக்குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. சிறிலங்கா ப்படைகளினால் நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களினால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார். நேற்று அதிகாலை 12.30 மணிமுதல் 4.30 மணிவரை மேற்படி பகுதிகள் மீது ஆட்லறி ஷெல்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. பலாலி, ஊர்காவற்றுறை ஆகிய சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து நடாத்தப்பட்ட இத் தாக்குதல்களினால் திருநாவுக்கரசு என்பவர் பலத்த காய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் இராணுவம் மீது 'அருள்-89' தாக்குதல்

பூநகரிப்பகுதியிலுள்ள மட்டுவில் நாடு பகுதியில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளால் 'அருள்-89' தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இத்தாக்குதல் நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. இதனையடுத்து சிறிலங்கா இராணுவம் பொதுமக்கள் வதிவிடங்களை நோக்கி எறிகணைத் தாக்குதலும் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொண்டது.

மட்டுவில்நாடு மேற்கில் உள்ள உ. அ, அதிபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ராணுவத்தின் அட்டூழியம் தொடர்கிறது

திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள்மீது தாக்குதல் நடைபெற்று வருகிறது. புதுக்குடியிருப்பு மேற்கு, கொலனிப்பட்டிமேடு, நாயன்மார்திடல், குஞ்சம்பத்திடல் ஆகிய தமிழ் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை சிறிலங்கா இராணுவத்தினர்கைது

(3 ஆம் பக்கம் பார்க்க)

...லைப்புலிகளுக்கும் இடையில் நேற்று திடீரென ஏற்பட்ட நேரடி மோதலில் யெசிந்தன் (நாவுக்கரசன், துரைராசா கௌரிசங்கர் மன்னார் வீதி, வவுனியா) என்ற போராளி வீரச்சாவடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## உலகில் 125 கோடி முஸ்லிம்கள்

(கொழும்பு)

உலகெங்கிலும் 125 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்று உலக முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

# லலித், காமினி குழுவினர் குடியுரிமை பறிபடுமா?

முன்னாள் அமைச்சர்களான லலித்அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோரினதும் மற்றும் ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து விலக்கப்பட்ட அதிருப்தியாளர்கள் எட்டுப் பேரினதும் குடியுரிமைகளைப் பறிக்க அரசு முயற்சி எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

இவர்களின் குடியுரிமையைப் பறிக்கும் முயற்சியில் முதற்கட்ட நடவடிக்கையாக அனுபற்றி ஆலோசிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மலையகத்தில் பதற்றநிலை பல இடங்களில் வேலை நிறுத்தம்

## 'புலி வேட்டையால்' எழுந்த விபரீதம்

## கைதானோரை விடுவிக்க தொழி.சங்கங்கள்கோரிக்கை

(பதுளை)

ஊவாப்பகுதியில்விடுதலைப் புலிகள் என்ற பெயரில் அப்பாவிதோட்டத் தொழிலாளர்கள் கைது செய்யப்படுவதை

மலையகப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யும்படி தோட்

(4ஆம் பக்கம் பார்க்க)

யும், சித்திரவதை செய்யப்படுவதையும் அடுத்து தமிழர் மத்தியிலும் பெரும் பதற்றமும், அச்சமும் ஏற்பட்டுள்ளது. இதேவேளை இக் கைது, சித்திரவதை என்பனவற்றைக் கண்டித்து பெரும்வேலைநிறுத்தப் போராட்டங்களிலும் தோட்டத் தொழிலாளர் இறங்கியுள்ளனர்.

அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களை புலிகளின் ஆதரவாளர்கள் என்று சாயம் பூசி கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைத்துள்ளுர்களைத்துதவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று கோரி ஊவாமாகாணத்தில் பசறை, மடுல்சீமை, லுணு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழநாதம்
# இரண்டாம் ஆண்டு நிறைவு
# போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் இரண்டாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறு கதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப் படும்.

★ கருத்துப் படங்கள் (Cartoon)
★ சிறுகதை
★ கவிதை

### போட்டியில் கலந்துகொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்

★ கருத்துப் படங்கள் 15 செ. மீ. X 12 செ. மீ. அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன் பிந்திக் கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1992 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும். இரண்டாவது ஆண்டு நிறைவு விழாபோட்டியில்முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

★ ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும். முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு இரண்டாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப்போட்டி என கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.


## வரி விளம்பரம்

### மனைப்பொருளியல் வகுப்புகள்

விரைவில் நடைபெறவிருக்கும் G.C.E (A/L) 1991 ஆம் ஆண்டிற்கான வினா, விடை வகுப்புகளும் 1992, 1993 ஆம் ஆண்டுகளுக்கான வகுப்புகளும் நடை பெறுகின்றன. விபரங்களுக்கு இல. 88, பலாலி றோட் இலுப்பையடிச் சந்தி யாழ்ப்பாணம். (2086)

### காணவில்லை

வெள்ளை 'பொம் மேரியன்' பெண் நாய்க்குட்டி ஒன்றைக் காணவில்லை, கண்டவர்கள் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தெய்வேந்திரம் பிறவுண் வீதி. யாழ்ப்பாணம். (2096)


# எயிட்ஸ் பற்றிய கைந்நூல்

(கொழும்பு)

தாதிகள் மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்குப் பயன்படும் வகையில் எயிட்ஸ் பற்றிய கைந்நூல் ஒன்றை சுகாதார திணைக்களம் வெளியிடவுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் எயிட்ஸ் ஆலோசகர் திருமதி எஸ். பிறன்கர் இக் கைந்நூலைத் தயாரிப்பதற்கான ஆலோசனையை வழங்கவுள்ளார்.

திருமதி பிறன்கர் காலி, கண்டி போதனா வைத்தியசாலைகளுக்கும், தனியார் வைத்திய நிலையங்களுக்கும் விஜயம் செய்து எயிட்ஸ் கட்டுப்பாட்டு வேலைகளுக்கு வைத்தியசாலைகளில் வசதிகள் உள்ளனவா என்பதைத் தெரிந்து கொண்டார்.

# தமிழரிடம் பணம் பறிப்பு; கொழும்பில் அதிகரிப்பு

(கொழும்பு)

புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதாக கூறிக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களிடம் பணம்பறிப்போர் தொகை அதிகரித்துள்ளது என கொழும்பில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பணத்தைப்பறி கொடுப்போர் அச்சம் காரணமாக செய்வதறியாது தவிக்கின்றனர். இதனால் பணம் பறிப்போரின் துணிவு அதிகரித்துச் செல்கிறது

முன்னர் இயங்கி செயலிழந்து போயிருக்கும் குழுக்களே இச்செயலில் ஈடுபட்டு வருவதாக தெரிய வருகிறது.

அண்மைக் காலங்களில்இவர்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளன.

## பாடுமீன் கழகம் வெற்றிபெற்றது

அமரர் குமரையா ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட மாபெரும் உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் சென்றசனிக்கிழமைஅரியாலை ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. சென் நீக்கிலஸ் அணிக்கு எதிராக மோதிய குருநகர் பாடுமீன் விளையாட்டு கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் வெள்ளி கப்பைதட்டியது [43]


## கம்பியூட்டர் கல்வி

❋ BASIC ❋ dBASE III+
❋ LOTUS 1-2-3 ❋ WORD STAR 2000+

### புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன:

வடமராட்சியில்
15-01-1992 [திங்கள், புதன், வெள்ளி]
18-01-1992 [சனி, ஞாயிறு]

யாழ். நகரில்:
22-01-1992 [திங்கள், புதன், வெள்ளி]
25-01-1992 [சனி, ஞாயிறு]

[செய்முறை பயிற்சிகள் யாவும் ஜெனரேட்டர் உதவி கொண்டு வழங்கப்படும்]

யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
சதாபொண்ஸ்
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.




யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3748)


# ஆயுதக் கொள்வனவு; நவாப்ஷரீப் பிரான்ஸ் விஜயம்

பாகிஸ்தான் பிரதம மந்திரி நவாவ்ஷரீப் முக்கியமான பாதுகாப்பு துறைக்கான தளபாடங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக அடுத்த வாரம் பிரான்ஸ் செல்வார் என்று பாகிஸ்தான் செய்தி ஏடு ஒன்று கூறியுள்ளது.

மிராஜ் 2000 ரக போர் விமானங்கள் மற்றும் ஒன்பது கன்ஸ்ரன் கலன்களை வாங்குவது பற்றியும் இறுதி முடிவு செய்வதற்காக அவர் பிரஞ்சு தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என்று அச்செய்தி ஏடு கூறுகிறது.

இஸ்லாமாபாத்திற்கு 90 மிகாவாட் பிரஞ்ச் அணுசக்தி நிலையமொன்றை வழங்குவது பற்றியும் அவர் பேச்சு நடத்துவார். பாகிஸ்தானிய குழுவில் அந்த நாட்டின் விமானப் படைத்தலைவரும் இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
## யாழ்ப்பாணக் கிளை.

# நினைவு கூருகின்றோம்

## 1992-01-13

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் தம்பலகமத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்

1987ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து தமிழீழம் வரும் போது தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய ஜோய் (செபஸ்தியாம்பிள்ளை அல்பேட்யோசப் - ஓடக்கரை வீதி, குருநகர்)

★ படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன் பிந்திக் கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1992 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும். இரண்டாவது ஆண்டு நிறைவு விழாபோட்டியில்முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

★ ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும். முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு இரண்டாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப்போட்டி என கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


இதோ!
மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும்
பிரசித்தி பெற்ற நிறுவனம்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

❋ அழகு மிளிரும் வர்ணவேலைகளா
❋ ஆங்கிலம் தமிழ் புத்தக வேலைகளா

தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய

நாடுங்கள்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்
New Era Publications

267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இ/3


திரி ஊழியர்களுக்குப் பயன்படும் வகையில் எயிட்ஸ் பற்றிய கைந்நூல் ஒன்றை சுகாதார திணைக்களம் வெளியிடவுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் எயிட்ஸ் ஆலோசகர் திருமதி எஸ். பிறன்கர் இக் கைந்நூலைத் தயாரிப்பதற்கான ஆலோசனையை வழங்கவுள்ளார்.

திருமதி பிறன்கர் காலி, கண்டி போதனா வைத்திய சாலைகளுக்கும், தனியார் வைத்திய நிலையங்களுக்கும் விஜயம் செய்து எயிட்ஸ் கட்டுப்பாட்டு வேலைகளுக்கு வைத்தியசாலைகளில் வசதிகள் உள்ளனவா என்பதைத் தெரிந்து கொண்டார்.


18-01-1992 [சனி, ஞாயிறு]

யாழ். நகரில்:
22-01-1992 [திங்கள், புதன், வெள்ளி]
25-01-1992 [சனி, ஞாயிறு]

[செய்முறை பயிற்சிகள் யாவும் ஜெனரேட்டர் உதவி கொண்டு வழங்கப்படும்]

யுனிக்கோ
கம்பியூட்டர்
சென்ரர்,
சதாபொண்ஸ்
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.




யுனிக்கோ
கம்பியூட்டர்
சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3748)


## ஆயுதக் கொள்வனவு; நவாப்ஷரீப் பிரான்ஸ் விஜயம்

பாகிஸ்தான் பிரதம மந்திரி நவாவ்ஷரீப் முக்கியமான பாதுகாப்பு துறைக்கான தளபாடங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக அடுத்த வாரம் பிரான்ஸ் செல்வார் என்று பாகிஸ்தான் செய்தி ஏடு ஒன்று கூறியுள்ளது.

மிராஜ் 2000 ரக போர் விமானங்கள் மற்றும் ஒன்பது கன்ஸ்ரன் கலன்களை வாங்குவது பற்றியும் இறுதி முடிவு செய்வதற்காக அவர் பிரஞ்சு தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என்று அச்செய்தி ஏடு கூறுகிறது.

இஸ்லாமாபாத்திற்கு 90 மிகாவாட் பிரஞ்ச் அணுசக்தி நிலையமொன்றை வழங்குவது பற்றியும் அவர் பேச்சு நடத்துவார். பாகிஸ்தானிய குழுவில் அந்த நாட்டின் விமானப் படைத்தலைவரும் இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

### உதவித் தாதிகள் பயிற்சி நெறி
(NURSE - AID COURSE)

மேற்படி பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி இலவசமாக நடாத்தப்படவுள்ளது. இப்பயிற்சியில் விருப்பமும், ஆர்வமும் உள்ளோர் தமது அனுபவம், ஆற்றல், கல்வித்தகைமை ஆகியவற்றை 24.01.1992 க்கு முன்பாக அறியத்தரவும். 25.01.1992 பிற்பகல் 2.00 மணிக்கு எமது பணிமனையில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

73, கண்டி வீதி, கௌரவ செயலாளர்.
யாழ்ப்பாணம்.

(சி 3775)

### முக்கிய அறிவித்தல்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் போது பூநகரி ஆலடிச்சந்தியில் தரித்து நின்று எடுக்க முடியாமல் உள்ள பொதி சுமக்கும் வாகனங்களின் (லொறிகளின்) உரிமையாளர்கள் தங்களுடைய வாகனம் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை வடபிராந்திய பொதிசுமக்கும் வாகனசங்ககாரியாலயத்தில்20-01-1992 திகதிக்கு முன்பதாக சமர்ப்பிக்கும் படி வேண்டுகிறோம்.

வ. பி. பொதிசுமக்கும் வாகன சங்கம்

(2092)

## நினைவு கூருகின்றோம்...

**1992-01-13**

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் தம்பலகமத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்

1987ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து தமிழீழம் வரும் போது தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய

ஜோய் (செபஸ்தியாம்பிள்ளை அல்பேட்யோசப் - ஓடக்கரை வீதி, குருநகர்)
பண்டிதர் (திருக்கோணமலை)
கோவிந்தன் (திருக்கோணமலை)
வேதமணி (செல்லச்சாமி சிவலிங்கம் - ஆண்டான் குளம், மன்னார்)
கிறிஸ்ரி (கிளிநொச்சி)
ஜஸ்ரின் (சந்தணம் செல்வராசா - 6ஆம் கட்டை, சாம்பல்தீவு, திருக்கோணமலை)
2ஆம்லெப். மகேந்திரன் (செட்டிகுளம்)

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் கொலை செய்யப்பட்ட வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

1989ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர்

லெப்.ஜெசி (சிவலிங்கம் ரவீந்திரன் - பாவற்குளம், வவுனியா)

பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம்தாய், பெண்குழந்தை உட்பட மற்றுமொரு சிறுமி

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி-3772)

## சிந்தனைக்கு

அநீதியை தாங்குபவனை விட, அநீதி இழைப்பவனே, என்றும் அதிக அவதியுறுவான்.
— பிளேட்டோ

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 13-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# மீண்டும் ஓர் இனக்கலவரம்?

பதுளை மாவட்டத்தில், இராணுவ சீருடை தரித்த ஆயுதம் தாங்கிய நபர்களினால், ஒரு தோட்டசுப்பிரிண்டன் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 10 இலட்சம் ரூபாவும் அபகரிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் இது புலிகளின் கை வரிசை எனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக பதுளை மாவட்டத்தில், மலையகத் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் விடுதலைப் புலிகள் என்ற பெயரில் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அத்தோடு, சிறிலங்காவில் உயர்ந்த மலைகளில் ஒன்றான நமுனுகுலத் தொடரில் விடுதலைப் புலிகளின் கைவிடப்பட்ட முகாம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் சிங்களப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனால், மலையகத்தில் இருந்து வரும் செய்திகள் கைது செய்யப்படுபவர்கள் அப்பாவிகள், மேலும் முகாம் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஒரு பௌத்த பிக்குவின் குடில் ஒன்றே நமுனுகுல மலையின் அடர்ந்த காட்டில் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றன.

மலையக மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் இந்த நடவடிக்கை பௌத்த பேரினவாதிகளின் திட்டமிட்ட செயலாகும். இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை அமைச்சர் தொண்டமான் முன்வைத்து தீவிரமாக அது தொடர்பாகச் செயற்பட்டு வரும் வேளையில் அதனைச் சாட்டாக வைத்து மலையக தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதித்திட்டம் இதுவாகும்.

மலையக மக்களுக்கு எதிரான இந்த நடவடிக்கையானது தற்போதைய தீர்வுத்திட்டத்தினால் உடனடியாக உருவானதல்ல. மலையகத்தில், தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகள் வலுவடைந்து வருவதினாலும் பாராளுமன்றத்தில் அவர்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்துவருவதும் தொடர்பாக எழுந்ததாகும்.

இதன்காரணமாகவே பதுளையில் நிகழ்ந்த கொலை, கொள்ளை தொடர்பாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் பொறுப்பற்ற செய்தியை வெளியிட்டுள்ளன. எதுவித ஆதாரமும் இல்லாமல் புலிகளின் கைவரிசை என பாதுகாப்பு வட்டாரங்கள் அறிக்கை வெளியிட்டுள்ளன. பாதுகாப்பு வட்டாரங்கள் ஏன் ஜே. வி. பியின் கை வரிசை என அறிக்கை விடவில்லை? 1988, 1989 ஆம் ஆண்டுகளில் பதுளை, மொனராகலை ஜே. வி பியின்வன்முறைகள் மிகவும் உயர்வாக நிகழ்ந்த மாவட்டங்களாகும். ஜனாதிபதித் தேர்தலின் போது மொனராகலை மாவட்டம் மொத்தமாகவே வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இந் நிலையில் பாதுகாப்பு வட்டாரங்கள் ஏன் ஜே. வி. பி. மீது சந்தேகம் எழுப்பவில்லை.

1983 ஆம் ஆண்டும் திரு நெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட போது இராணுவத்தரப்பும், அரசியல்வாதிகளும் விடுத்த பொறுப்பற்ற செய்திகளே இரத்தம் தோய்ந்த 'கறுப்பு ஜூலை'க்கு வழியைத் தோற்று வித்தது. இதன் தாக்கம் இன்றும் சிறிலங்கா அரசியலில் இருந்து மறையாத நிலையில் மீண்டும் ஒரு பெரிய கலவரத்தை. உருவாக்குவதே இச்செய்திகளின் நோக்கமாகும். இதற்கான புறச்சூழலும் கனிவடைந்துள்ளது.

ஆனால் இன்று இந்த நிலையை உருவாக்குவதற்கு யார் பொறுப்பு என்பது இன்னும் தெளிவாக இல்லை. வெளிவரும் செய்திகளில் இருந்து அரசியலிலுள்ள பேரினவாத சக்திகளும் இராணுவத் தரப்பினரும் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிடுகின்றார்கள் என்பது மட்டும் இப்போதைக்குத் தெரிகிறது. இதன் எதிரொலி இலங்கை அரசியலை மேலும் இரத்தக்களரி மிக்கதாக ஆக்குவதோடு பெரும் நெருக்கடிக்குள் தள்ளும் என்பது மட்டுமே தற்பொழுது தெரிவிக்கக் கூடியது.

### தமிழருக்கு நஷ்ட ஈடு

# கர்நாடக மாநில அரசுடன் மத்திய அரசு தொடர்பு

(டில்லி)

காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட வன்முறைகளில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி மத்திய அரசு, கர்நாடக அரசுடன் தொடர்பு கொள்ள உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் அறிவித்துள்ளார்.

முன்னதாக டில்லியில் எஸ். பி. சவானை சந்தித்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வன்முறைகள் காரணமாக தமிழ் மக்களின் தனியார் வீடுகள், தொழில், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கு முந்நூறு கோடி ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இந்த இழப்பீடு பற்றி அறிய உச்சநீதி மன்ற நீதியரசர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும், தமிழ் நாட்டிற்கு வந்த மக்கள் மீண்டும் கர்நாடகத்துக்குச் செல்ல அந்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த சவான் தமிழ் நாடு அரசின் இக் கோரிக்கைகளை வலியுறுத்த முயற்சி மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

## அகதிகள் செலவீட்டை இந்தியா ஏற்கிறது

(கொழும்பு)

இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளுக்கான அனைத்துச் செலவுகளையும் தாம் பொறுப்பேற்பதாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார் என வெளியுறவுத்துறை அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் புதுடில்லியில் இலங்கைத் தமிழ் அகதிகளின் விடயம் குறித்துப் பேசுகையிலேயே பி. வி. நரசிம்மராவ் இதனைத் தெரிவித்ததாக ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன் 30,000 அகதிகள் முதற் கட்டமாக இலங்கை திரும்புவர் என்றும் ஹேரத் குறிப்பிட்டார்.

## குரோசியா; ஸ்லோவேனியா ஐரோ.சமுதாயம்அங்கீகாரம்

(லண்டன்)

குரோசியா, ஸ்லோவேனியா ஆகிய குடியரசுகளை தனி நாடுகளாக அடுத்தவாரம் பிரகடனம் செய்யப் போவதாக ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் அறிவித்துள்ளது.

யூகோசிலாவிய சமஷ்டிக் குடியரசுகளாகிய இவையிரண்டும் கடந்த வருடம் தனி நாடுகளாகப் பிரகடனம்செய்ததையடுத்து யூகோ. சமஷ்டிப்படைகள் இக்குடியரசுகளினுள் பிரவேசித்தன.

இதனையடுத்துநடைபெற்ற சண்டைகளில் பலர் பலியாகினர். 15 தடவைகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டும் யூகோ. சமஷ்டிப் படைகள் இவற்றை மீறிவந்தன.

ஐரோப்பிய பொருளாதார சமூகம் அனுப்பி வைத்த சமாதான தூது தோல்வியில் முடிந்ததை அடுத்து அவற்றை தனி நாடுகளாக அங்கீகரிக்கப்போவதாக இப் பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழு.செல்லும்நோயாளர் சமுகம் தர கோரிக்கை

(ஈச்சமோட்டை)

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் குமணா கப்பல் எதிர் வரும் (16-01-92) வியாழக் கிழமை கொழும்பு நோக்கிச் செல்ல இருப்பதால் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட 35 நோயாளிகளையும் அன்று காலை 7.00 மணிக்கு குடிதண்ணீர், சிற்றுண்டி வகைகள் போன்ற பொருள்களுடன் மேற்படி வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (43)

## ராக்கிங்கை தவிர்க்க அலுவிகார கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேரும் மாணவர்கள் மீது எந்தவிதமான 'ராக்கிங்' செய்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரான பேராசிரியர் ஏ. அலுவிகார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ராக்கிங் செய்வதனால் புலமைப் பரிசில்களை பொதுமக்களிடம் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு பெற்றுக் கொள்வது கஷ்டமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

### அமைச்சர்

சபை உறுப்பினர் கருணதாச கமஹே சமர்ப்பித்தார். இதனைச் சமர்ப்பித்த பின்னர் உரையாற்றிய அவர்,

விடுதலைப்புலிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்க முயலும் தொண்டமான் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கவும் முற்பட்டுள்ளார்.

இது தவிர யோசனைகளையும் முன்வைத்திருக்கிறார்.

அவரது அந்த யோசனை நாட்டுமக்கள் அனைவருக்கும் துரோகம் இழைப்பதாகும். எனவே அவரை அமைச்சர் பதவியிலிருந்து ஒதுக்கி விடுமாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இலங்கையில் முப்பது வீதம் நிலப்பரப்பையும், மூன்றில்இரு பங்குடைய கரையோரப்பகுதியையும் கொண்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைத்துச் சகல துறைமுகங்களையும், விமானத் தளங்களையும் தாரைவார்த்து அவற்றைத் தமிழ் மக்களின் சொத்துக்கள் என ஒப்படைத்து அவற்றைச் செயற்படுத்துவதே அமைச்சர் தொண்டமானின் ஆலோசனையாகவுள்ளது.

ஈழம் என்றவார்த்தை குறிக்கப்படாமலிருந்தாலும், அவரது யோசனை ஈழ இராச்சியத்தை உருவாக்க வழிவகுப்பதாக இருக்கின்றது இதனால் நாட்டில் ஓயாத சண்டைகள் நடைபெற வழி செய்வதாக இருக்கின்றது. அமைச்சர் தொண்டமானின் வடக்கு-கிழக்கு இணைப்பை நாம் பலமாகக் கண்டிக்கின்றோம் என்றும் கருணதாசா தனது தீர்மான உரையில்குறிப்பிட்டார்.

ஐ. தே. க. உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் பிரேரணையை ஆதரித்துப் பேசிய பின்னர் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

### ஆரியரெட்னாவின்

செய்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

குணதாச லியனகே தனது இராஜினாமாக் கடிதத்தில் நீண்டகாலமாகஅரசியலில்ஈடுபடமுயற்சித்த ஆரியரெட்னா தனது நோக்கம் பற்றி வெளிப்படையாக தெரிவித்ததன் மூலம் தனது உண்மையான நிறத்தை காட்டியுள்ளார்' என்றும்-

'ஆரியரெட்னா பற்றிய சரிதை நூல் உட்பட நான் எழுதிய சர்வோதய இயக்கம் சம்பந்தமான எந்த நூல்களையும் விற்பனைக்கு விடக் கூடாது' என்றும், அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1958 ஆம் ஆண்டு நாலந்த வித்தியாலயத்தில் ஆரியரெட்னா நடத்திய முதலாவது கூட்டத்திலிருந்து அரசியல் சார்பற்ற தொண்டர் ஸ்தாபனமாக சர்வோதய இயக்கம்விளங்கும் என்ற நம்பிக்கையின் பெயரில் நான் ஆரிய ரெட்னாவுடன் இணைந்து செயற்பட்டு வந்தேன் என்றும் லியனகே தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

### பாதுகாப்பு

கொழும்பில் நேற்று முன்தினம் இதனை அவர் தெரிவித்தார் என்றும் கூறப்படுகிறது.

அண்மையில் பல காவலரண்களை புலிகள் தாக்கி அழித்ததோடு பெருமளவு ஆயுதங்களையும் கைப்பற்றியதைத் தொடர்ந்தே இவ் அறிவிப்பு வெளிவந்துள்ளதாக அவதானிகள் கருதுகின்றார்கள்,

### பேச்சுக்கு

கள் தலையிடுவதை இந்திய அரசும் எதிர்த்து வருகிறது. எனினும் சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் கனடாவின் மத்தியஸ்துவத்தை ஏற்றுக் கொண்டால் இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி கனடா இந்த விவகாரத்தில் சமரசம் செய்ய தயாராக உள்ளது.

இதேவேளை, மேற்குலகின் மத்தியஸ்துவத்தைவிடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்கனவே வரவேற்றுள்ளது தெரிந்ததே.

### திருமலையில்

செய்து துன்புறுத்தியுள்ளனர்.

இக்கிராமங்களைச் சேர்ந்த 600க்கு மேற்பட்ட பொது மக்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தம்பலகாமம் பகுதியில் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் பெரும் சிரமப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் காலை கணேசபுரம், கைமுந்தான், செட்டியாவெளி பாலவளை ஆகிய தமிழ் கிராமங்களைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான முத்துக்குமாரு கந்தசாமி (33 வயது) கைது செய்யப்பட்டு சிறிலங்காஇராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப் பட்டார்.

# அணுத் திட்டம் கைவிட்டால் பாக்.கில் இரத்த ஆறு ஓடும்

## நவாப் ஷெரீப்பிற்கு எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்தை நிறுத்தம் செய்யும் பொருட்டு அமெரிக்கா கொடுக்கும் நெருக்குதல்களுக்கு நவாப் ஷெரீப் அரசு அடிபணியுமேயானால் பாகிஸ்தானில் ரத்தக்களறி ஏற்பட்டு விடுமென்று பாராளுமன்ற உறுப்பினர் தாரிக் சௌத்திரி எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தானின் அணு ஆயுதக் கொள்கையை தீவிரமாக ஆதரித்து வரும் இவர், அமெரிக்க செனேட்டர் லாரி பிரஸ்லர் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பயணத்தை ஒட்டி இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஒரு சில இராணுவஜெனரல்கள் ஒரு புறமும், மொத்த நாடும் இராணுவமும் இன்னொரு புறமும் நிற்க பாகிஸ்தான் தெருக்களில் இரத்த ஆறு ஓடும் எனத்தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணு ஆயுதங்களை உருவாக்கி வருகிறது என்ற சந்தேகத்தின் பேரில் அந்த நாட்டிற்கு 1990 ஒக்டோபர் முதல் அளிக்கப்பட்டு வரும் அமெரிக்க உதவி முழுவதையும் தடுத்து நிறுத்தியவர்பிரஸ்லர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கருங்கடல் கப்பற்படை; உக்ரெயினுக்கு ஒருபகுதி

(மொஸ்கோ)

பிரச்சினைக்கு உள்ளாகிய கருங்கடல் கடல்படை அணியின் ஒரு பகுதியை உக்ரெயினுக்கு விட்டுக்கொடுக்க ரஷ்யா இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் சோவியத் கடற்படையைச் சேர்ந்த முன்னூறு கப்பல்களைக் கொண்ட இந்த அணியிலிருந்து எத்தனை கப்பல்கள் உக்ரெயின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் என்பது உடனடியாகத் தெரியவில்லை என்றும்.

இராணுவம் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்வதற்கு உயர் இராணுவ அதிகாரிகளின்கமிஷன் ஒன்றை அமைக்க ரஷ்யாவும் உக்ரெயினும் ஒப்புக்கொண்டுள்ளன என்றும்,

ரஷ்யாவின் உயர் இராணுவ அதிகாரிகள் உக்ரெயின் தலைநகரில் உக்ரெயின் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய பிறகு இதுபற்றிய உடன்பாடு எட்டப்பட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவஉதவிக்கு இந்தியா ரஷ்யாவையே நாடுகிறது

(டில்லி)

இந்தியா தனது இராணுவத் தேவைகளைப் பெறுவதற்காக ரஷ்யாவிற்கும் ஏனைய முன்னாள் சோவியத் குடியரசுகளுக்கும் உயர் முன்னுரிமை அளிக்கும் என இந்திய பாதுகாப்பமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

இந்திய வானொலிக்குஇவர் அளித்துள்ள சிறப்பு பேட்டி ஒன்றிலேயே இராணுவ சாதனங்களை பெறுவது குறித்த அச்சத்தை போக்குவதற்காக புதிய குடியரசுகளின் தலைவர்களுடன் பணம்செலுத்தும் முறை மற்றுப் வேறுபிரச்சினைகளை தீர்பபது குறித்து விவாதிப்பதற்காக உயர் நிலை இந்தியக்குழு நேற்றுக் காலை மொஸ்கோ சென்றுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்தியாவின் இராணுவத் தேவைகள் பாதிக்கப்படாமல் பாதுகாப்டளிக்கப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் எல்சின் ஏற்கனவேஉறுதியளித்துள்ளார் என்றும் சரத் பவார் குறிப்பிட்டார்.

நிதிப்பற்றாக்குறை இருந்தாலும் பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளில் அதிக பணம் முதலீடு செய்யப்படும் என்றும்,

பாகிஸ்தானின்எல்லையைக் கடந்து அங்குள்ள 'பயங்கரவாதி'களின் முகாம்களை தாக்கி அழிக்கக்கூடிய வல்லமை இந்திய ராணுவத்திற்கு இருக்கின்றது என்றும்,

ஆனால் எந்த வகையான ஆக்கிரமிப்பு நடவடிக்கையிலும் இந்தியாவிற்கு நம்பிக்கையில்லாதபடியால் பாகிஸ்தானுக்குள் நுழைய மாட்டோமென்றும், பாகிஸ்தானுடன் முழு அளவு போரை தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# வீரசேகரனுக்குப் பிணை; தமிழக அரசு ஆட்சேபம்

'டடா' ச் சட்டத்தின்மூலம் கைது செய்யப்பட்ட வழக்கறிஞர் வீரசேகரனை உயர்நீதி மன்றம் பிணையில் விடுதலை செய்ததை ஆட்சேபித்து உச்ச நீதிமன்றத்தில்[மேன்முறையீடு செய்யத் தமிழக அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகச் சட்டத்துறை அமைச்சர் கே.எஸ். கிருஷ்ண சுவாமிசென்னையில்வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார்.

டடாச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களைப் பிணையில் விடுதலை செய்ய உயர்நீதிமன்றத்திற்குஅதிகாரமில்லை என்றும்,

சிறப்பு நீதிமன்றத்திற்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் மட்டுமே இதற்கான அதிகாரம் உள்ளதென்றும் அவ்வறிக்கை யில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மல்வத்தை

தொண்டமான் தன்னைச் சந்தித்த சமயம், வடக்கு-கிழக்குத் தொடர்பாகச் சம்பாஷிக்கவில்லை என்றும் தான் தீர்வுத் திட்டத்தை ஏற்றுள்ளதாகத் தொண்டமான் வெளியிட்ட அறிக்கை பொறுப்பற்ற செயல் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

1970 களில் தொண்டமான் நிஸங்கா விஜெயரெட்ணாவுடன் தலதா மாளிகைக்கு வந்தபோது வழங்கிய மணியைப் பற்றித் தாம்உரையாடியதாகவும்-

பௌத்தத்துக்கும், இந்து சமயத்துக்குமிடையில் உள்ள ஒற்றுமை குறித்துத் தொண்டமான் கருத்து வெளியிட்டார். நானும் அவரின் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டதோடு, ஒரு ஐக்கிய இலங்கைக்காக பாடுபடுவது எமது கடமை என்று தான் கூறியதென்றும், புதுவருடத்தை ஒட்டி நல்லாசிகளை வழங்கியதாகவும்,

முழுநாட்டையும் பாதிக்கும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையில் தொண்டமான் பொறுப்பற்ற முறையில் வெளியிட்ட செய்தியை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### விமான

மடைந்தார்.

தொடர்ந்து காலை 7.00 மணியளவில் சிறிலங்கா விமானப்படையினது இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் பொன்னாலை கிருஸ்ணன் கோயிலுக்கு பிற்பகுதிகள்மீது குண்டுத்தாக்குதல்களைநடாத்தின.

பின்னர் காலை 8.45 மணியளவில் மீண்டும் அப்பகுதிக்கு வந்த குண்டு வீச்சு விமானம் ஒன்று குண்டுத்தாக்குதல்களை நடாத்தியது. தொடர்ந்து காரைநகர்கடற்பகுதியில்இருந்தும் வலந்தலைச் சந்தியில் இருந்தும் மேற்படி பகுதிகளை நோக்கி கலிபர்த தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல்களால் மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளில் இருந்து பொதுமக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர். (க

### லலித்

அமைக்க ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுவருகிறது,

சிறிலங்கா சிரேஷ்ட அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'சண்டே ரைம்ஸ்' இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

இத்தகைய ஆணைக் குழு ஒன்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு, இரு அமைச்சர்கள் மற்றும் எட்டுப்பேரினதும் குடியுரிமையைப் பறிக்கலாம் என்ற அரசுக்குச் சாதகமான முடிவு ஏற்படினும் அந்த முடிவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறவேண்டும்,

தற்போதுள்ள சூழ்நிலையில் பிரேமதாசாவின் அரசுக்கும் பாராளுமன்றத்தில் அவ்வளவு பலம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கலந்துரையாடல்

தமிழீழத்தேசிய ஆசிரியர் ஒன்றியத்தின் மருதனாமடக் கோட்டத்திற்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெற உள்ளது. முன்னர் வெளிவந்த அறிவித்தலில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது,

### கைதானோரை

டத் தொழிற்சங்ககூட்டுக் குழு கோரிக்கைவிடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக இந்த அமைப்பின் சார்பில் இதன் தலைவர் திரு. நடேசன் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். பல அப்பாவித்தொழிலாளர்களும், இளைஞர்களும் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டுவருகின்றனர். இவ்வாறான கைதுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் கோரப்பட்டிருக்கிறது.

### 1991 இல்

வடிக்கைகள் ஆகியவற்றால் 83 பத்திரிகையாளர்கள்கொல்லப்பட்டனர் என்று பிரான்சின் சர்வதேச செய்தி ஸ்தாபனம் ஏ. எஸ். பி. அறிவித்துள்ளது.

யூகோஸ்லாவியாவில் 21 பேரும், ஜப்பானில் 15 பேரும், வளைகுடா யுத்தத்தின் போது 7 பேர் என்று இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் இலங்கையிலும் பலர் கொல்லப் பட்டுள்ளனர் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மணலாற்றில் மாணவர் வசதிகளின்றி அவதி

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தைச் சேர்ந்த 1500 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதில் பெருஞ்சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர். அம் மாவட்டத்தைச் சேர்ந்த அநேக பாடசாலைகள் இராணுவ நடவடிக்கைகளாலும் விமானக் குண்டு வீச்சுகளாலும்முற்றாகஅழிக்கப்பட்டுள்ளன. கொக்கிளாய், கருநாட்டங்கேணி கொக்குத் தொடுவாய் பகுதி பாடசாலைகள் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ளன.

விடுதலைப்புலிகளின் முயற்சியினால் இம் மாணவர்களுக்கு வீடுகளில் பாடசாலைகள் நடைபெறுகின்றன தளபாடங்கள் முற்றாக சேதமடைந்து போயுள்ளமையால் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கல்வி கற்பிக்கப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

# கொக்கட்டிச்சோலை விசாரணை இம் மாதம் வெளியிடப்படும்

-பிரட்மன்

(கொழும்பு)

கொக்கட்டிச் சோலை சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை இம் மாதம் வெளியிடப்படும் என சிறிலங்கா ஜனாதிபதியின் வெளிநாட்டு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச் சோலை சம்பவம் தொடர்பாக ஆணைக்குழு 189 சாட்சியங்களை விசாரணை செய்யவேண்டியுள்ளது என்றும்,

இது வரை 105 பேரின் விசாரணைகள் முடிந்துள்ளன என்றும்,

இச் சம்பவத்தின் போது ஏற்பட்ட இழப்புகளையும் ஆணைக்குழு மதிப்பிட வேண்டியிருப்பதாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளதென்றும் பிரட்மன் தெரிவித்துள்ளார்.

# சிறிமா இந்தியாவில் ஓய்வு;

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தியாவில் இரண்டு மாத காலம் ஓய்வெடுக்க செல்லவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

வைத்திய சிகிச்சைக்குப் பின்னர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் இவர் மேலும் இரு மாதம் ஓய்வெடுப்பதற்காக இந்தியா செல்லவுள்ளார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

### மலையகத்தில்

கலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த22 ஆயிரம் தோட்டத்தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்துவேலை நிறுத்தத்தில்இறங்கியுள்ளனர். இது''அடையாள வேலைநிறுத் தம்'' என்றும் தொழிலாளர்கள் கைது செய்யப் படுவதும் துன்புறுத்தப்படுவதும் தொடருமானால் வேலைநிறுத்தப் போராட்டம் ஊவாமாகாணம் முழுவதற்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் தொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சில தொழிற்சங்கங்கள் தமது அங்கத்தவர்களை வேலைக்குச் செல்லுமாறு கேட்டிருந்த போதிலும் தொழிலாளர்கள் தொழிற்சங்க பேதங்களை மறந்து தமது பொதுப்பிரச்சினைக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் எனவும் மலையக தொழிற்சங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

சந்தேகப்படும் எவரையும் தொழிற்சங்க அனுசரணையுடன் கைது செய்யும்படியும், கைது செய்யப்பட்டவர்களை பார்வையிடுவதற்கு அனுமதிக்கும்படியும், தற்பொழுதுகைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் உடனடியாக விடுதலைசெய்யப் படவேண்டும் என்றும் அமைதிப் பிரதேசமாக இன உறவுகள் நிலவும் ஊவாப்பகுதியைத் தொடர்ந்தும் அவ்வாறே இருக்க வழி செய்ய வேண்டும் என்றும்தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளைமட்டக்களப்புக்குச் செல்லும் மலையக இளைஞர்களுக்கு விடுதலைப் புலிகள் புல்லுமலையில் வைத்து ஆயுதப் பயிற்சி வழங்கியுள்ளனர் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

### பூநகரி

காரியாலயத்திற்கு அண்மையிலுள்ளபொதுமக்களின் 5 வீடுகள் நேற்று சிறிலங்கா இராணுவத்தால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.


## கலந்துரையாடல்

புலிகளின் குரல் வானொலியில் பங்குபற்றும் இசைக் கலைஞர்களின் கலந்துரையாடல் ஒன்று நாளைசெவ்வாய்க்கிழமை 1992 - 01 - 14 மாலை 4மணிக்கு நிதர்சனம் செயலகத்திலுள்ள அமலன் அரங்கில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் இசைக் கலைஞர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'புலிகளின் குரல்'
தீப்வீதி,
திருநெல்வேலி,
தமிழீழம்.

(சி/3776)


இப்பத்திரி யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.